**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender** :
**Miscellaneous** : **CC. Case No.44/2020**
**Sessions** :
**Deposition of Witness for** : **PW 12,** LW12

| | |
|---|---|
| Name | திரு.பஞ்சாட்சரம் |
| Father's/Husband Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 10th day of May 2024**.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்)

**முதல் விசாரணை,**

1. நான் தற்போது துணை காவல் கண்காணிப்பாளராக காஞ்சிபுரம் மாவட்டத்தில் பணிபுரிந்து 31.7.2018 பணி ஓய்வு பெற்றேன்.

2. கடந்த 2013 முதல் 2014 வரை செய்யூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது சி.சாந்தா என்பவர் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற கிரிமினல் ஓ.பி.எண்.23313/2014, நாள் 28.8.2014 ஆணையின்படி மேற்படி புகார்தாரரை அழைத்து புகாரின் பேரில் அரசு கூடுதல் வழக்கறிஞர் அவர்களிடம் கருத்துரை பெற்று 22.12.2014 அன்று செய்யூர் காவல் நிலைய குற்ற எண்.1100/2014 சட்டப்பிரிவுகள் 120(பி), 465, 467, 468, 471, 420 உ/இ 149 இ.த.ச. வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முல் தகவல் அறிக்கையின் நகல் அ.சா.ஆ. 19 குறியீடு செய்யப்படுகிறது)**

3. இவ்வழக்கில் சமபந்தப்பட்ட சாட்சிகளை சாந்தா, சந்திரசேகரன், வசந்தி, குப்புராஜ் மற்றும் வி.சி.கருணாகரன் ஆகியோர்களை 24.12.2014 அன்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பணி மாறுதல் காரணமாக மேல்விசாரணைக்கு எனக்கு பின்னால் வந்த ஆய்வாளர் திரு.குமரன் வசம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை,</u>

அ.சா.ஆ.19ன் படி எனக்கு தகவல் கிடைக்கப்பெற்ற நாள் 22.12.2014 என்றால் சரிதான். அ.சா.ஆ-12 புகாரை நான் பெற்று அதில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுக்கப்பட்ட புகாரில் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்படி அரசு வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்று 22.12.2014 அன்று புகார்தாரரரை நேரிடையாக அழைத்து விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி புகார் எனக்கு எப்படி கிடைக்கப்பெற்றது என்றால் கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட நடப்பு தாளை கருத்து பெற்று வழக்கு பதிவு செய்த நாளன்று தான் கிடைக்கப்பெற்றதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்சொன்ன உத்தரவில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யுமாறு குறிப்பிடப்படவில்லை என்றால் இது சிவில் சம்பந்தப்பட்ட வழக்காக இருப்பதால் அரசு வழக்கறிஞரிடம் கருத்துரை பெற்றதில் மேற்சொன்ன வழக்கில் குற்ற பிரிவுகளில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

3. விசாரணை என்றால் புகார்தாரர் சாந்தாவை மட்டும்விசாரித்தால் போதுமா என்றால் புகார்தாரர் சாந்தாவை மட்டும் விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய முடியும். கு.வி.மு.ச.41 ஏ படி எதிரி தீனதயாளன் என்பவரை அழைத்து விசாரணை மேற்கொண்டேனா என்றால் இல்லை.

4. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு எந்த எந்த ஆவணத்தை நான் பார்வையிட்டேன் என்றால் நான் எந்த ஆவணங்களையும் பரிசீலனை செய்யவில்லை. புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன்.

5. புகாரை பெற்று விசாரித்து விசாரணை அடிப்படையில் புகாரில் என்ன குற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்று நான் தான் முடிவு செய்ய வேண்டுமே தவிர அரசு வழக்கறிஞரிடம் முடிவு கேட்டது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல.

6. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு வங்கிக்கு சென்று எதாவது ஆவணங்களை பரிசீலனை செய்தேனா என்றால் இல்லை. 24.12.2014 அன்று சாட்சிகளை

நான் விசாரித்தேன். அவ்வாறு நான் சாட்சிகளை விசாரித்தபோது முத்துசாமி முதலியாரின் கையொப்பம் இட்ட ஆவணங்களை ஏதேனும் பெற்றோ அல்லது அவற்றை பெற கு.வி.மு.ச.91ன் கீழ் பெற முயற்சி ஏதேனும் செய்தேனா என்றால் சான்று எதுவும் பெறவில்லை. நான் பணி மாறுதல் காரணமாக செல்ல வேண்டி இருந்ததால் தொடர் விசாரணைக்காக அடுத்த வந்த ஆய்வாளரிடம் தகுந்த சான்றுகளை பெற குறிப்பிட்டு சென்றேன்.

7. மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுக்கு முன்பாக காவல் துறையில் சாந்தா என்பவர் புகார் கொடுக்கப்பட்டு அது சிவில் உரிமையியல் வழக்கு என்றும் எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்ற விவரம் தெரியுமா என்றால் என்னுடைய பணி காலத்தில் அவ்வாறு எதுவும் நிகழவில்லை.

8. நான் ஆவணங்களை சரியாக பார்க்காமல் சாட்சிகளை சரிவர விசாரணைக்காமல் உயர்நீதிமன்ற உத்தரவை சரியாக புரிந்துகொள்ளாமல் எதிரி மீது தவறாகமுதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சிவில் வழக்கு நன்றாக தெரியும் என்றாலும் தவறுதலாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை, இல்லை**

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-N.Preethi

District Munsif Cum Judicial Magistrate
**Cheyyur**